**செ.வெ.எண்: 32** **நாள்:28.08.2020**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் குடும்பம் மற்றும் பொது இடங்களில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தேவைப்படும் அவசரகால மீட்பு, மருத்துவ உதவி, மனநல ஆலோசனை, காவல் உதவி, சட்ட உதவி, தற்காலிக தங்குமிடம் உணவு ஆகியவற்றை வழங்கி அவர்களை பாதுகாக்க சமூக நலத்துறையின் கீழ் "சகி"- ஒருங்கிணைந்த சேவை மையம் (OSC) செயல்படுகின்றது. அதில் பணிபுரிய கீழ்கண்ட நிலைகளில் ஒப்பந்த பணியாளர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர். அரியலூர் மாவட்டத்தில் கீழ்கண்ட அலுவலகத்தில் தங்கள் சுயவிவரங்களுடன் **12.09.2020 மாலை 5.45-க்குள்** விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

**பதவி** - வழக்குப்பணியாளர் (Case Worker)**, பணியிடம்** -1, **கல்வித்தகுதி** -BSW & MSW (Counselling Psychology or Development Management), **வயது வரம்பு** - 35-க்குள் இருக்க வேண்டும். **முன் அனுபவம் -** பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்பு செயல்பாடு திட்டத்தில் (அரசு/தனியார்) 2 வருடம் பணிபுரிந்த அனுபவம் மற்றும் 1 வருட ஆலோசனை வழங்கும் பணியில் ஈடுபட்ட அனுபவம் தேவை. தங்கி பணிபுரியும் பதவி ஆகும். உள்ளுரை சார்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். **தொகுப்பு ஊதியம் ரூ.12,000 மற்றும் சிறப்பு ஊதியம் ரூ.3,000**

**பதவி -**பல்நோக்கு உதவியாளர், **பணியிடம்** -1, **முன்அனுபவம்** - நிர்வாக அமைப்பின் கீழ் பணிபுரிந்தவராகவும் / சமையல் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.24 மணி நேரம் சேவை அளிக்கும் வகையில் சுழற்சிமுறையில் பணி அமர்த்தப்படும். **தொகுப்பு ஊதியம் ரூ.6,400/-**

மேலும், தொடர்புக்கு மாவட்ட சமூக நல அலுவலகம், அறை எண்:20, மாவட்ட ஆட்சியரக வளாகம், அரியலூர்-621704 என்ற முகவரியினை அணுகலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**